**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.306/2024**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | பீடிசுற்றும் வேலை |
| கிராமம் | : | நலன்குறிச்சி | வயது | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 09th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்இல்லை.)**

**முதல் விசாரணை :**

நான் நலன்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும்வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம்காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 24.12.2021ம் தேதிக்கு 2 மாதத்திற்கு முன்பு நான் எனது அம்மா வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது எதிரி என்னை பார்த்து தேவிடியா என்று என்னை கூப்பிட்டார் நான் யாரை கூறுகிறாய் என்று கேட்டதற்கு உன்னை தான் கூப்பிடுகிறேன் என்று சொன்னார்.இந்த விசயத்தை நான் என் கணவரிடமும் என் மாமாவிடமும் கூறியதற்கு ஊரில் உள்ள பெரியவர்களிடம் சொல்லிஎதிரியை சத்தம்போட்டார்கள். எதிரி இதை மனதில் வைத்துக் கொண்டு 24.12.2021ம் தேதியன்று இரவு 12.30 மணிக்கு கோயிலுக்கு செல்வதற்காக நானும் எனது அண்ணி சகாயராணியும் தவமணி வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்த போது எதிரி புண்டா மவளே என்று சொல்லி என்னை பார்த்து வா என்று கூப்பிட்டார். என்னுடைய அண்ணி எதிரியைப் பார்த்து சத்தம் போட்டார் அப்போது எதிரி

என் அண்ணியின் இடது கண்ணத்தில்அடித்தார். என்னுடைய கணவரும் கொழுந்தநார் ஜான்சும் எதிரியை சத்தம் போட்டார்கள். எதிரி அப்போது கீழே கிடந்த கல்லை எடுத்து எரிந்தார். நாங்கள் விலகி விட்டோம். மறுநாள் 25.12.2021ம் தேதி காலை 10.00மணியளவில்நானும் என் கணவரும் பைக்கில் ஆலங்குளத்திற்கு சென்றோம். போகிற வழியில்ஆறுமுகக்கனி கறிக்கடைக்கு அருகில்எங்கள் வண்டியை எதிரி வழிமறித்தார். என் கணவர் வண்டியை விட்டு கீழே இறங்கினார். எதிரி முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து என் கணவரை ஓங்கி வெட்டினார் என் கணவர் சுதாகரித்து கீழே குனிந்தார். என் கணவர் நெட்டூர் மார்க்கெட் சாலையை நோக்கி ஓடினார். பக்கத்தில்உள் ள கடைக்காரர்கள் சத்தம் போட்டவுடன் எதிரி ஓடிவிட்டார். எதிரி போகும் முன்பு யாரும் பக்கத்தில்வந்தால் உங்களையும் வெட்டி விடுவேன் என்று கூறினார். பின்னர் அருகில்உள்ள காவல் நிலையத்தில்நானும்என் கணவரும் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும் இது சம்பந்தமாக போலீசார்என்னை விசாரித்தார்கள்.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.12 17:34:59 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.306/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாஸ்கர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜோசப் | தொழில் | : | ஏ.சி.மெக்கானிக் |
| கிராமம் | : | நலன்குறிச்சி | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 09th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்இல்லை.)**

**முதல் விசாரணை :**

நான் நலன்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் ஏ.சி மெக்கானிக்வேலை செய்து வருகிறேன் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 24.12.2021ம் தேதி இரவு கோயிலுக்கு எனது மனைவியும் எனது சகோதரியுமான சகாய ராணி தவமணி வீட்டிற்கு அருகே சென்ற போது எதிரி அங்கு வந்து என் மனைவியை தேவிடியா மவளே என அசிங்கமாக பேசியுள்ளார். இதை கேட்ட எனது தங்கை சகாயராணியை எதிரி டவலது கன்னத்தில் அறைந்துள்ளார். சத்தம் கேட்டு நானும்எனது தம்பி ஜான்சும் அங்கு சென்ற போது கீழே கிடந்த கல்லை எடுத்து எதிரிஎங்கள் மீது எரிந்தார். நாங்கள் சுதாகரித்து விலகி விட்டோம். நாங்கள் உடனே அங்கு இருந்த போலீசாரிடம் சொன்னோம். பின்னர் அடுத்த நாள் 25.12.2021ம்தேதி நானும் எனது மனைவியும் எனது இருசக்கர வாகனமான டிஎன் 76 ஏடி 8053 என்ற வாகனத்தில் நெட்டுர்கறிக்கடைக்கு சென்ற போது அங்கு நின்ற எதிரி எங்களை வழிமறித்து போலீசாரிடம் என்னைப் பற்றி சொல்வாயா என்று கையில்

மறைத்து வைத்திருந்தஅருவாளை எடுத்து கழுத்தை நோக்கி வெட்டினார்நான் சுதாகரித்து வண்டியை கீழே போட்டு விட்டு மார்க்கெட்டை நோக்கி ஓடினேன். எனது மனியின் அலறம் சத்தம் கேட்டு அங்கிருந்தவர்கள் எதிரியை பார்த்து சத்தம் போடவும் எதிரி வயல்பக்கம் ஓடி விட்டார். நான் பின்பு எனது மனைவியை அழைத்துக் கொண்டு ஆலங்குளம் காவல் நிலையத்தில் ஒரு புகார்மனு கொடுத்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.12 17:35:08 +0530